**செ.வெ.எண்: 78 / ஜுலை / 2021** **நாள்:22.07.2021**

**செய்திக் குறிப்பு**

---------

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் வாயிலாக கல்வி பயிலும் உடலியக்க குறைாபாடுடையோா், பாா்வையற்றோா், காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத்திறனாளி மாணவ மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. அதன்படி 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ரூ.1000/-மும், 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை ரூ.3000/-மும், 9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ரூ.4000/-மும், இளங்கலை மற்றும் பட்டயப்படிப்பு பயில்பவர்களுக்கு ரூ.6000/-மும், முதுகலை பட்டம் பயில்பவர்களுக்கு ரூ.7000/-மும் என கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் பார்வையற்றோருக்கு கல்வி உதவித் தொகையுடன் வாசிப்பாளர் உதவித் தொகையாக 9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ரூ.3000/-மும், இளங்கலை பட்டம் ரூ.5000/-மும் மற்றும் முதுகலைப் பட்டம் பயில்பவர்களுக்கு ரூ.6000/-மும் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது.

தகுதியுள்ள கல்வி பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ மற்றும் மாணவியர் திருச்சிராப்பள்ளி கண்டோன்மென்ட், மாவட்ட நீதிமன்ற வளாகம் பின்புறம், அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் நேரில் விண்ணப்பப் படிவம் பெற்று விண்ணப்பத்துடன் கல்வி பயிலும் நிறுவனத்திடமிருந்து சான்றொப்பம், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையின் நகல், தனித்துவ அடையாள அட்டையின் நகல் (UDID), 9-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் பயில்பவராக இருந்தால் கடந்த ஆண்டின் மதிப்பெண் சான்று நகல், வங்கி கணக்குப் புத்தக நகலுடன் விண்ணப்பித்துப் பயன்பெறுமாறும் மேலும் விபரங்களுக்கு அலுவலக தொலைபேசி எண் 0431- 2412590-ல் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**